1979 ஏப்ரல் 23]

தலைக்குந்தா கிராமத்தில் கல் உடைக்க அனுமதி.

*வினா எண். 776—திரு. கே. உச்சி: மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், உதகை ஒன்றியம், தலைக்குந்தா என்ற கிராமத்திலுள்ள போயர் சமுதாயத்தினர் தாங்கள் இதுவரை கல்லுடைத்த இடத்தில் கல்லுடைக்க அனுமதி கேட்டு கோரிக்கை ஏதாகிலும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், கல்லுடைக்க வழங்கும் அனுமதியில் மாறுதல்கள் ஏதாவது செய்யப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) நீலகிரி மாவட்ட உதகை வடக்கு வனசரகத்தைச் சார்ந்த முத்தினாடு கல் குதைக்குழியில் கல்லுடைப்பதற்கு 'தலைக்குந்தா' என்ற கிராமத்திலுள்ள போயர்கள் அனுமதி கேட்டு நீலகிரி மாவட்ட தெற்குக் கோட்ட மாவட்ட வன அலுவலரிடம் கோரிக்கை வரப்பெற்று அனுமதிச் சீட்டின் பேரில் அவர்கள், அங்கீகரிக்கப்பட்ட கல்—குதைக்குழியில் (quarry) கல்லுடைக்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

(ஆ) இல்லை.

பேரறிஞர் அண்ணா எழுதிய நூல்கள்

*வினா எண். 777—திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு செய்தி-அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரறிஞர் அண்ணா எழுதிய நூல்களின் பட்டியல் அரசின் கைவசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவர அறிக்கை ஒன்று பேரவை முன் வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) மற்றும் (ஆ) அரசுக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் * விவர அறிக்கை ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது.

---

* 116-ம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

திரு. க. மருதாசலம்: பேரவைத் தலைவர் அவர்களே, அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய நூல்கள் பல இன்னும் இருக்கின்றன. ஆனால், இங்கு வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையைப் பார்க்கும்போது சில குறிப்பிட்ட புத்தகங்கள் மட்டும் தான் கையில் இருப்பதாகத் தெரிகிறது. இந்தப் பட்டியலில் இல்லாத புத்தகங்களை—அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய புத்தகங்களை—அரசு வாங்கி கையிருப்பில் வைக்குமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: கிடைத்திருக்கின்ற அளவுக்கு உள்ள புத்தகங்களின் பட்டியல் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருகிறது. மாண்புமிகு உறுப்பினர் மேலும் அவருக்கு கிடைத்த தகவல்களை தருவார்களேயானால் அவைகளையும் சேகரிக்க முயற்சி எடுக்கப்படும்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அறிஞர் அண்ணா அவர்கள் எழுதியுள்ள நூல்களில் 'கம்ப ரசம்' என்ற புத்தகம் இந்த லிஸ்டிலிருந்து நீக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய நூல்களின் பட்டியல் இங்கே வைக்கப்பட்டிருக்கிறது. பட்டியலில் எதைச் சேர்ப்பது, எதை நீக்குவது என்கின்ற பிரச்னை இப்போது எழவில்லை. ஆகவே, இதற்கான பதில் இல்லை.

விராச்சிலை கிராமத்தில் உள்ள அரிசனக் குடியிருப்புகள்

*வினா எண். 778—திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் தாலூகாவில் உள்ள விராச்சிலை கிராமத்தில் கட்டப்பட்டுள்ள அரிசன குடியிருப்புகள் மோசமான நிலையில் உள்ளதால் இன்னும் அம் மக்கள் குடியேறவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: (அ) புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், விராச்சிலை கிராமத்தில் கட்டப்பட்டுள்ள அரிசன குடியிருப்புகள் மோசமான நிலையில் இல்லை. கட்டப்பட்ட அத்தனை குடியிருப்புகளிலும் அரிசன மக்கள் குடியேறியுள்ளார்கள்.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.